**செய்தி வெளியீடு எண் : 1435** **நாள் : 13.09.2024**

**நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாள்**
**பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி**

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவரான தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டி 17.09.2024 அன்று நடைபெறுவதாக செய்திக்குறிப்பு வெளியிடப்பட்டது. தற்பொழுது 17.09.2024 மிலாதிநபி விடுமுறை நாள் என்று அரசால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதால் அன்று நடைபெறவிருந்த தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் 19.09.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களுக்கு 19.09.2024 அன்று முற்பகல் 09.00 மணி முதல் 12.30 மணி வரையிலும், கல்லூரி மாணவர்களுக்கு 19.09.2024 அன்று பிற்பகல் 02.30 மணி முதல் 5.30 மணி வரையிலும் **வட சென்னை அளவில்** வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியிலும், **மத்திய சென்னை அளவில்** சேப்பாக்கம் மாநிலக் கல்லூரியிலும், **தென் சென்னை அளவில்** இராணி மேரி கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu